# தேசபக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்
RNI.No.TNTAM/2022/86012
ஆசிரியர்: G. ராஜா 9842364068
இணைஆசிரியர்: R. கண்ணன் 9994422779
★மலர்:05 ★இதழ்:106 ★17.08.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை
★Volume:05 ★Issue:106 ★17.08.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## திருவண்ணாமலையில் 80வது சுதந்திர தின விழா: 6,500 பயனாளிகளுக்கு ரூ.7.53 கோடி நலத்திட்ட உதவிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் வழங்கினார்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் 80வது சுதந்திரதினவிழா இன்று (15.08.2026) சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.உதயகுமாருடன் திறந்த வெளி வாகனத்தில் சென்று காவல்துறையினரின் அணிவகுப்பை பார்வையிட்டு, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். சமாதானத்தின் அடையாளமாக வண்ண பலூன்களை பறக்கவிட்டதுடன், சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். தேசப்பற்றையும் நாட்டின் பெருமையையும் வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் 700க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர். இக்கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு மாணவர்களை பாராட்டினார்.

### 6,500 பயனாளிகளுக்கு ரூ.7.53 கோடி நலத்திட்ட உதவிகள்



சுதந்திர தின விழாவையொட்டி நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் மொத்தம் 6,500 பயனாளிகளுக்கு ரூ.7 கோடியே 53 இலட்சத்து 47 ஆயிரத்து 995 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் ரூ.1 கோடியே 67 இலட்சத்து 5 ஆயிரத்து 500 மதிப்பில் வீட்டுமனைப் பட்டா, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, தற்காலிக மருத்துவ இயலாமை உதவித்தொகை, திருமண உதவித்தொகை மற்றும் விபத்து நிவாரண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் 348 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.5 இலட்சத்து 1 ஆயிரத்து 476 மதிப்பில் தையல் இயந்திரம், காலிபர், பார்வை மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான கைப்பேசி, மூன்று சக்கர சைக்கிள், செயற்கைக் கால் மற்றும் சக்கர நாற்காலி உள்ளிட்ட உதவிகள் 22 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. வேளாண்மைத்துறையின் சார்பில் ரூ.2 இலட்சத்து 28 ஆயிரத்து 971 மதிப்பில் மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு மற்றும் நுண்ணீர் பாசனத் திட்ட உதவிகள் 2 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.3 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நிரந்தர கல் பந்தல் அமைப்பதற்கான உதவிகள் 3 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டன.கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூ.97 இலட்சத்து 69 ஆயிரம் மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், நாட்டுப்புறக் கலைஞர்கள் கடன், சிறு வணிகர் கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன், கால்நடை கடன், விதவை கடன் மற்றும் பயிர் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன் உதவிகள் 23 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. மகளிர் திட்டத்தின் சார்பில் ரூ.43 இலட்சம் மதிப்பில் 2 பயனாளிகளுக்கு வங்கி நேரடி கடன்கள் வழங்கப்பட்டன. மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் ரூ.87 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் 698 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. சுகாதாரத்துறையின் சார்பில் ரூ.10 ஆயிரம் மதிப்பில் 5 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டன. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில் ரூ.1 கோடியே 70 இலட்சத்து 43 ஆயிரத்து 200 மதிப்பில் 5,256 பயனாளிகளுக்கு தீவிர நோய் பாதிப்பு, கல்வி, திருமணம், இயற்கை மரணம் மற்றும் ஓய்வூதிய உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. தொழில் வணிகத்துறையின் சார்பில் ரூ.2 இலட்சம் மதிப்பில் 2 பயனாளிகளுக்கு மிதிவண்டி உதிரிபாகங்கள் விற்பனை மற்றும் மளிகைக் கடை தொடங்குவதற்கான உதவிகள் வழங்கப்ப ட்டன. சமூக நீதி நலத்துறையின் சார்பில் ரூ.6,990 மதிப்பில் ஒரு பயனாளிக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. மாவட்ட சமூக நல அலுவலகத்தின் சார்பில் ரூ.1 கோடியே 74 இலட்சத்து 27 ஆயிரத்து 858 மதிப்பில் 129 பயனாளிகளுக்கு அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவி திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவி திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டன. பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ரூ.1 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பில் 3 பயனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.552 அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் தொடர்ந்து, பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 552 அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். மேலும், சுதந்திர தின விழாவில் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கோப்பைகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி அவர்களின் திறமைகளை பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.உதயகுமார், மாவட்ட வன அலுவலர் கு.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, செய்யாறு சார் ஆட்சியர் எல்.அம்பிகா ஜெயின், வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வம் (திருவண்ணாமலை), சிவா (ஆரணி) மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சுங்கச்சாவடி கட்டணத்திலிருந்து பத்திரிகையாளர்களுக்கு விலக்கு அளிக்க மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை

நாட்டின் நான்கு தூண்களில் ஒன்றாக விளங்கும் பத்திரிகைத் துறையில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள், செய்தி சேகரிப்பு பணிகளுக்காக தினமும் பல்வேறு இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக மாவட்ட மற்றும் தாலுகா அளவில் பணியாற்றும் நிருபர்கள், தங்களது எல்லைக்குட்பட்ட அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பொது கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு சென்று செய்திகளை சேகரிக்க வேண்டி உள்ளது.

உதாரணமாக, தேனி மாவட்டம் சின்னமனூர் போன்ற நகர் பகுதிகளில் இருந்து செய்தி சேகரிக்க புறப்படும் பத்திரிகையாளர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ள பகுதிக்கு தினமும் சென்று வர வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது.

அவ்வாறு செல்லும் பாதைகளில், புறவழிச்சாலைகளை முழுமை யாக பயன்படுத்தாத நிலையிலும், மிகக் குறைந்த தொலைவிலேயே (சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்திலேயே) சுங்கச்சாவடிகள் அமைந்துள்ளன.மாவட்ட அளவிலான செய்தியாளர்கள் தினமும் பணி நிமித்தமாக சுங்கச்சாவடிகளை கடந்து செல்ல வேண்டியுள்ளதால், சுங்கக் கட்டணம் செலுத்துவது அவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார சுமையையும், அன்றாட சிரமத்தையும் ஏற்படுத்துகிறது.

செய்தி சேகரிப்புக்காக செல்லும் போது பத்திரிகையாளர் அடையாள அட்டையை காண்பித்தால், சுங்கச்சா வடி பணியாளர்கள் அதை ஏற்றுக் கொள்வதில்லை எனவும், தேசிய நெடுஞ்சாலை



ஆணையத்திடம் (NHAI) இருந்து கடிதம் பெற்று வருமாறு கூறி அனுமதி மறுப்பதாகவும் குற்றச்சாட்டு எழுகிறது. பத்திரிகையாளர்கள் என்பவர்கள் பொதுமக்களின் பி ரச்னைகளை அரசின் க வனத்திற்கு கொண்டு செல்லும் மக்கள் பணியில் ஈடுபட்டு வருபவர்கள். அனுதினமும் செய்தி சேகரிக்கும் அவசர பணியில் இருக்கும் இவர்களுக்கு சுங்கச்சாவடிகளில் ஏற்படும் காலதாமதமும், கட்டணச் சுமையும் பெரும் மன உளைச்சலை தருகிறது. எனவே, செய்தி சேகரிக்கும் பணியை எவ்வித தடையுமின்றி தடையின்றி மேற்கொள்ளவும், அவர்களின் நிதிச்சுமையை குறைக்கவும் வழிவகை செய்ய வேண்டும். "தமிழ்நாடு முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களின்" சிரமங்களை கருத்தில் கொண்டு, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) சுங்கச்சாவடி கட்டணத்திலிருந்து பத்திரிகையாளர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என மத்திய அரசுக்கும், மாண்புமிகு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும், மாநில அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அவர்களுக்கும் "தமிழ்நாடு முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களின்" சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

## ராஜபாளையம் மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் 80வது சுதந்திர தின விழா கோலாகலம்; "மாணவர்களே நாட்டின் எதிர்காலத் தூண்கள்" - சிறப்பு விருந்தினர்கள் அறிவுரை

ராஜபாளையம் மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் இந்தியாவின் 80வது சுதந்திர தின விழா தேசபக்தி, தேசிய உணர்வு, ஒற்றுமை மற்றும் உற்சாகத்துடன் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவையொட்டி பள்ளி வளாகம் தேசியக் கொடிகள் மற்றும் அலங்காரங்களால் அழகு படுத்தப்பட்டிருந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் தேசிய உணர்வுடன் விழாவில் கலந்து கொண்டனர். குரு பரம்பரை பூஜையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. பள்ளியின் முதல்வர் மேகலா இராமதாஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் குரு பரம்பரை பூஜை செய்து விழாவைத் தொடங்கி வைத்தனர்.

உயர் அதிகாரிகள் சிறப்பு விருந்தினர்கள் விழாவில் மத்திய ஜி.எஸ்.டி. மற்றும் மத்திய கலால் துறையின் உயர் அதிகாரிகளான டி. சண்முக சுந்தர் மற்றும் சுப்ரசன்ன பால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

பள்ளியின் முதல்வர் மேகலா இராமதாஸ் வரவேற்புரையாற்றி, சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களை அன்புடன் வரவேற்றார். பொதுப்பணியில் அர்ப்பணிப்பு, பொறுப்பு, நேர்மை மற்றும் கடமையுணர்வு ஆகியவற்றை மாணவர்கள் தங்களது வாழ்க்கையின் அடிப்படை மதிப்புகளாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். மேலும், பள்ளியின் முதல்வராக தனது புதிய பொறுப்பில் கல்வி, ஒழுக்கம், நற்பண்புகள், சிறப்பு மற்றும் மகிழ்ச்சி நிறைந்த சூழலை உருவாக்க ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் இணைந்து செயல்படுவேன் என உறுதியளித்தார். வலிமையான, அமைதியான மற்றும் செழிப்பான இந்தியாவை உருவாக்க மாணவர்கள் சிறந்த பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

"பூமியில் சொர்க்கம்" என்ற மகரிஷியின் கனவை நனவாக்க வேண்டும் விழாவின் முக்கிய நிகழ்வாக, குழுமத் தலைவர் பிரம்மச்சாரி கிரீஷ் ஜி அவர்களின் சிறப்பு சுதந்திர தினச் செய்தி வாசிக்கப்பட்டது.

இந்தியா 79 ஆண்டுகால சுதந்திரப் பயணத்தை நிறைவு செய்து 80வது ஆண்டு சுதந்திரப் பயணத்தில் அடியெடுத்து வைக்கும் இந்நாளில், நாடு முழுவதும் உள்ள அனைத்து மக்களுக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

குருதேவ் சுவாமி பிரம்மானந்த சரஸ்வதி ஜி மகராஜ் மற்றும் மகரிஷி மகேஷ் யோகி ஜி ஆகியோர் அருளிய வேத ஞானம் மற்றும் ஆன்மிகப் பாரம்பரியத்தை நினைவுகூர்ந்ததுடன், நாட்டிலும் உலகிலும் வறுமை, துன்பம், பயம், வன்முறை, பயங்கரவாதம் உள்ளிட்ட அனைத்து தீமைகளும் அகன்று, "பூமியில் சொர்க்கம்" என்ற மகரிஷி ஜி அவர்களின் தொலைநோக்குப் பார்வை நனவாக அனைவரும் பாடுபட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

"சாதாரண குடும்பத்தில் இருந்து உயர்ந்த பதவியை அடைய முடியும்" சிறப்புரையாற்றிய மத்திய ஜி.எஸ்.டி. மற்றும் மத்திய கலால் துறை அதிகாரி டி. சண்முக சுந்தர், தனது வாழ்க்கைப் பயணத்தை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தாம், கல்வி மற்றும் விடாமுயற்சியின் மூலம் உயர்ந்த அரசுப் பதவியில் பணியாற்றி வருவ



தாகக் குறிப்பிட்ட அவர், "நீங்களும் என்னைப் போன்று வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும். அரசு உயர் பதவிகள் மட்டுமின்றி மருத்துவர், பொறியாளர், கணினி வல்லுநர் என பல்வேறு துறைகளில் சாதனை படைக்கலாம்" என்றார்.

மாணவர்கள் ஒழுக்கத்தை வாழ்க்கையின் முக்கிய அடிப்படையாகக் கொண்டு, ஆசிரியர்கள் கற்றுத் தரும் பாடங்களையும் அறிவுரைக ளையும் கவனமாகக் கேட்டு, அவற்றை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

"CUP" மூலம் கல்வியில் வெற்றி பெறலாம்

மாணவர்கள் கல்வியில் முழுமையான கவனம் செலுத்துவதற்கான எளிய வழிமுறையாக "CUP" என்ற கருத்தை அவர் எடுத்துரைத்தார்.

C – CONCENTRATION – கவனம்

U – UNDERSTANDING – புரிந்துகொள்ளுதல்

P – PRACTICE – பயிற்சி

என மூன்று அம்சங்களையும் மாணவர்கள் மனதில் பதிய வைத்துக் கொண்டு, கவனத்துடன் கற்று, புரிந்துகொண்டு, தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் கல்வியில் சிறந்து விளங்க முடியும் என்றார்.

மேலும், மத்திய கலால் மற்றும் ஜி.எஸ்.டி. துறைகளின் செயல்பாடுகள், சுங்கவரி மற்றும் ஜி.எஸ்.டி. வரி வசூலின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு எளிமையான முறையில் விளக்கினார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வரி செலுத்துதல் மற்றும் வரி நிர்வாகத்தின் பங்களிப்பு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

"மாணவர்களே நாட்டின் எதிர்காலத் தூண்கள்"

மற்றொரு சிறப்பு விருந்தினரான சுப்ரசன்ன பால் பேசுகையில், "மாணவர்களே நாட்டின் எதிர்காலத் தூண்கள். நீங்கள் ஒழுக்கத்துடன் கடினமாகப் படித்து நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டும்" என்றார். பல்வேறு நாடுகளில் இருந்து பொருட்கள் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும், அவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுவதாகவும் விளக்கினார்.

மேலும், "அறிவியல், தொழில்நுட்பம், கலை, இலக்கியம், விளையாட்டு என எந்தத் துறையை நீங்கள் தேர்வு செய்தாலும் அதில் சிறந்து விளங்கி நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும். எதிர்காலத்தில் உயர்ந்த அதிகாரிகளாகவும், மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் உருவாகலாம்" என்றார். தேசபக்தி ஒரு நாள் கொண்டாட்டம் அல்ல சுதந்திர தினம் என்பது ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் கொண்டாடப்படும் விழா அல்ல என்றும், தேசபக்தி என்பது ஒவ்வொரு நாளும் நமது செயல்களில் வெளிப்பட வேண்டிய உணர்வு என்றும் சுப்ரசன்ன பால் குறிப்பிட்டார்.

மாணவர்களின் முதன்மையான பங்களிப்பு கடின உழைப்புடன் கல்வி கற்பதாகும். எதிர்காலத்தில் பொறுப்புள்ள குடிமக்களாக வளரும்போது பிறரிடம் அன்புடனும் கருணையுடனும் நடந்து கொள்வதும், சமூகத்திற்கு உதவுவதும் நாட்டிற்கான சிறந்த பங்களிப்பாகும் என்றார்.

மேலும், சமூக ஊடகங்களில் தேவையற்ற மீம்கள், ட்ரோலிங் உள்ளிட்ட எதிர்மறையான செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மொழி, சாதி, மதம், ஏழை, பணக்காரர், உயர் அதிகாரி, கீழ்மட்ட ஊழியர் என எந்த வேறுபாடும் இல்லாமல் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்

விழாவை மேலும் சிறப்பிக்கும் வகையில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தேசபக்திப் பாடல்கள், நடனங்கள் உள்ளிட்ட பல்வேறு கலைநிக ழ்ச்சிகளில் மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் பார்வை யாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

விழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். அவர்களின் உற்சாகமான பங்கேற்பு பள்ளி வளாகம் முழுவதும் தேசபக்தி மற்றும் தேசிய ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியது.

மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதுடன், நல்லொழுக்கம், ஒழுக்கம், மனிதநேயம், சமூகப் பொறுப்பு மற்றும் தேசப்பற்று ஆகிய உயரிய பண்புகளுடன் வளர வேண்டும் என்ற கருத்து விழா முழுவதும் வலியுறுத்தப்பட்டது. இறுதியில் நாட்டுப்பண் பாடப்பட்டு, மரியாதையுடன் 80வது சுதந்திர தின விழா இனிதே நிறைவடைந்தது.

# பழனியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி



80வது சுதந்திரதினத்தை முன்னிட்டு, We The Leaders அமைப்பின் சார்பாக இன்று பழனியில் மாபெரும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் We The Leaders அமைப்பினர் திரளாக கலந்து கொண்டு, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, APA கல்லூரி அருகில் We The Leaders இயக்கத்தின் தொழிற்சங்கமான "என் மண் என் மக்கள் ஆட்டோ ஓட்டுநர் நிலையம்" திறந்து வைக்கப்பட்டது.

பழனியை தூய்மையான, சுகாதாரமான மற்றும் பசுமையான நகரமாக மாற்றும் நோக்கில் தொடர்ந்து பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுப்போம்.

# புள்ளிலைன் ஊராட்சியில் சுதந்திர தின விழா; கிராம சபை கூட்டம்

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியம் புள்ளிலைன் ஊராட்சியில் 80வது சுதந்திர தினவிழா, கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் பொன்னையன் தலைமையில் நடைபெற்றது.




கிராம சபைக் கூட்டத்தில் புழல் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு காசநோய், ஹெச்ஐவி குறித்து விழிப்பு உணர்வு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பற்றாளர் சத்தியவாணி, கிராம நிர்வாக அலுவலர் பிரபு, வேளாண்மை முகம்மது, நியாய விலைக் கடை வினோத்குமார், அங்கன்வாடி பணியாளர் சிவகாமி, மகளிர் குழு நிர்வாகிகள், ஊராட்சி பணியாளர்கள், தவெக புள்ளிலைன் ஊராட்சி செயலாளர் பவித்குமார் உள்ளிட்ட கிராம பொது மக்கள் கலந்துகொண்டனர்.

புள்ளிலைன் ஊராட்சிக்குட்பட்ட பாயாசம்பாக்கத்தில் சர்வே எண் 36இல் தரிசு நிலம் உள்ளது. அருகில் அமைந்துள்ள ஊராட்சிகளைச் சேர்ந்த மக்களுக்கும், வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கும் இந்த இடத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்படுவதாக தகவல் வருகின்றது. எனவே இந்த தரிசு இடத்தில் பாயாசம்பாக்கத்தில் வசிக்கும் மக்களுக்காக சமுதாய நலக் கூடமும், இந்தப் பகுதியில் வசிப்பவர்களுக்கே இந்த இடத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும், மற்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த இடங்களை ஒதுக்கீடு செய்யக் கூடாது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# மகரிஷி பள்ளியில் 80வது சுதந்திர தின விழா மற்றும் மாணவ தலைவர்கள் பதவியேற்பு விழா கொண்டாட்டம்

திருவண்ணாமலையில் மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் 80வது சுதந்திர தின விழா மிகவும் ஆர்வத்தோடும் தேச பக்தி உணர்வோடும் கொண்டாடப் பட்டது.




பள்ளியின் முதல்வர் R. அனிதா ராம் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் குரு பரம்பரை பூஜை செய்து விழாவினை தொடங்கி வைத்தனர். சிறப்பு விருந்தினராக முன்னாள் இராணுவ வீரர் சஞ்சய் காந்தி மூவர்ணக் கொடியேற்றி வீரவணக்கம் செலுத்தினார் . பின்னர் மாணவர்களின் அணிவகுப்பு நடைபெற்றது.

பள்ளி முதல்வர் தனது வரவேற்புரையில் மகரிஷியின் இலட்சியப் பாதையில் சென்று நாம் அனைவரும் இலட்சிய மாணவர்களாக உருவாகி, இலட்சிய இந்தியாவை மலரச் செய்ய பாடுபட வேண்டும் என்று எடுத்துரைத்து, மகரிஷி பள்ளி குழுத்தின் தலைவர் மரியாதைக்குரிய கிரிஷ் வர்மாஜின் வாழ்த்து மடலை வாசித்து, சிறப்பு விருந்தினர்களை வரவேற்று மகிழ்ந்தார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினர் வழக்கறிஞர் மற்றும் சமூக ஆர்வலர் தனஞ்செழியன் மாணவர்களிடத்தில் கல்வி, ஒழுக்கம் ,நாட்டுப்பற்று தேசப் பற்று உணர்வை மேலோங்கச் செய்யும் வகையில் சிறப்புரையாற்றினார் மேலும் சிறப்பு விருந்தினராக ரோட்டரி இன்டர் நேஷனல் சங்கத்தின் தலைவர் மற்றும் முன்னாள் மாணவர் இஷான் சந்த் , துணை பொறியாளர் (நீர்வளத்துறை) அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். பின்னர் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளான பரதம், தேச பக்தி பாடல்கள், கராத்தே,சிலம்பாட்டம் போன்றவை கண்கவர் காட்சியாக அமைந்தது. இவ்விழாவின் முக்கிய அம்சமாக "இலட்சிய பாரதம்" படைக்கும் வேதக்கல்வி ,வேத முறையில் விவசாயம்,வேதமுறையில் ஆரோக்கியம்,வேத பாதுகாப்பு என்ற நான்கு தலைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

நிறைவாக பள்ளியின் சமூக அறிவியல் ஆசிரியை மலர்விழி நன்றி உரை கூறினார் பின்னர் மாணவ மாணவியருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.நிறைவாக நாட்டுப் பண்ணுடன் இவ்விழா இனிதே நிறைவுற்றது.

# கேடிஎஸ். சீனிவாசன் செட்டியார் குடும்பத்தினர் சார்பில் 1000 பேருக்கு அறுசுவை அன்னதானம்

செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி அருள்மிகு ஸ்ரீ லட்சுமி அம்மன் திருக்கோயில் தீ மிதி திருவிழாவை முன்னிட்டு கேடிஎஸ். மஹால், எஸ்விஎல்எஸ் நிறுவன உரிமையாளர் கேடிஎஸ். சீனிவாசன் செட்டியார் குடும்பத்தினர் சார்பில் 1000 பேருக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி தவெக நிர்வாகி கேடிஎஸ் மஹால் காசி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.



ஆலய அறங்காவலர் குழுத் தலைவர் கோதண்டபாணி, தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் கே.விஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தீ மிதிக்கும் பக்த கோடிகள், பொதுமக்கள், தவெக செங்குன்றம் நகர நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.



பழனி அருகே 88 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் இரண்டு பேர் கைது பழனி அருகே நெய்க்காரப்பட்டி வி கே மில்ஸ்போலாமாவலசுபகுதியில்விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்தார் 88 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பழனி தாலுகா காவல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி தலைமையில் உதவி ஆய்வாளர்கள் ராஜ்குமார் ஆனந்த் மற்றும் வேலுமணி அருள்சாமி காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்

# பழனி மலைக்கோயிலில் புதிய கட்டுப்பாடு

பழனி மலைக்கோயிலில் அர்ச்சகர்கள், காவலாளிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் 'ஸ்மார்ட் போன்' பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் செல்போன் கொண்டு செல்ல ஏற்கனவே தடை உள்ளது. மீறி செல்போன் பயன்படுத்தும் பக்தர்களுக்கு ரூ.500 அபராதம் விதிக்கப்படுகிறது.



தற்போது கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்கள் , காவலாளிகள் , தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்கும் ஸ்மார்ட்போன் பயன்படுத்த கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.பணியாளர்கள் ஸ்மார்ட் போன் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.கோயில் பாதுகாப்பு மற்றும் பணிகளின் ஒழுங்கை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.பணியாளர்கள் அவசரமாக தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலையில், ஸ்மார்ட் போனுக்குப் பதிலாக சாதாரண பட்டன் போன் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இந்த நடைமுறை செப்டம்பர் 1 முதல் அமலுக்கு வருவதாக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுவிதிகளை மீறி ஸ்மார்ட்போன் பயன்படுத்தினால், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பழனி மாவட்டம் சார்பில், மாவட்டத் தலைவர் திரு. ஜே.பி. சரவணன் அவர்கள் தலைமையில், பழனியில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், பேரமைப்பின் மாநில இணைச் செயலாளர் திரு. கந்தவிலாஸ் பாஸ்கரன் அவர்கள், மாவட்ட மற்றும் நகர நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு, தேசத் தலைவர்களை நினைவுகூர்ந்து, சுதந்திர தின வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.



பழனி நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில், சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. மண்டல தலைவர் வீரமணி தலைமையில், பழனி நகர தலைவர் முத்து விஜயன் முன்னிலையில், மாவட்டத் துணைத் தலைவர் முருகானந்தம், சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் சுந்தர், நகர் மன்ற உறுப்பினர்கள். பத்மினி முருகானந்தம், மகாலட்சுமி மாசிலாமணி, மாநில ஓபிசி அணி பொதுச் செயலாளர் சாயிரா பானு, நகர காங்கிரஸ் இளைஞர் அணி தலைவர் பாலகுமார், பழனி நகர மகளிர் அணி தலைவி திவ்யபாரதி, ராஜீவ் காந்தி சமூக அறக்கட்டளை தலைவர் செந்தில், செயலாளர் பிரேம், மாவட்ட எஸ்சி எஸ்டி பிரிவு தலைவர் குப்புசாமி, மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் பர்வேஸ் அகமது, துணைத்தலைவர் அக்கீம், மாநில செயற்குழு உறுப்பினர் பச்சையம்மாள், காமராஜர் தேசிய பேரவை பாப்புசாமி, இளைஞர் அணி நேரு, ராஜீவ் காந்தி சங்கதன் முத்துலட்சுமி ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். நிகழ்ச்சியில். நஸ்ருல், சாகுல் ஹமீது, ஆசிரியர் ரபீக், ஆத்தி கண்ணன், ஐ என் டி யூசி. தமிழரசன், ஆயக்குடி பேரூர் தலைவர் லோகநாதன், ஜெயக்குமார், பீட்டர், ஆறுமுகம், சரவணன், ஸ்ரீகாந்த், நேதாஜி குமரேசன், மாணவரணி முகமது நவ்பால், மகளிர் அணியைச் சேர்ந்த சண்முகப்பிரியா, தேவி குமுதா லட்சுமி சரஸ்வதி உஷா கலைச்செல்வி பானுமதி பிரியாமணி ஜோதிமணி. மற்றும் பலர் கலந்து கொண்டனர். நன்றியுரை நகர காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் முகமது அலி கூறினார். பழனி ரயில்வே ரோட்டில் முன்னாள் மாவட்ட எஸ்சி எஸ்டி பிரிவு செயலாளர். தேவேந்திரன் தலைமையில். பழனி காங்கிரஸ் நகர தலைவர். முத்து விஜயன் கொடி ஏற்றினார்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு,

# பழனி துளிர் போதை மீட்பு மற்றும் மனநல மையம், பழனி அரசு தலைமை மருத்துவமனை, பழனி ராயல் சிட்டி அரிமா சங்கம் மற்றும் பழனி மைக்ரோபாத் டயக்னாஸ்டிக் சென்டர் ஆகியவை இணைந்து நடத்திய இரத்ததான முகாம்

சுதந்திர தினத்தை முன்னிட்டு, பழனி துளிர் போதை மீட்பு மற்றும் மனநல மையம், பழனி அரசு தலைமை மருத்துவமனை, பழனி ராயல் சிட்டி அரிமா சங்கம் மற்றும் பழனி மைக்ரோபாத் டயக்னாஸ்டிக்சென்டர்ஆகியவைஇணைந்து நடத்திய இரத்ததான முகாம் சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்வில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இளஞ்சிறுத்தைகள் (இளைஞர்) எழுச்சிப் பாசறையின் மாநில செயலாளரும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பழனி மாவட்டத் தலைவருமான திரு. JB சரவணன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, இரத்ததானம் வழங்கியவர்களை பாராட்டி சிறப்பித்தார்.

மேலும், மருத்துவர்கள் PPN விமல்குமார், நிதர்சனா மருத்துவமனை முருகேஷ்குமார், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பழனி மாவட்டத் துணைத் தலைவர் ஜபகனிராஜ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கருத்தியல் பரப்புப் மாநிலச் செயலாளர் பாவேந்தன், விசிக மாவட்டப் பொறுப்பாளர்கள் ஜலால், சபிக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

"இரத்ததானம் செய்வோம்... உயிரைக் காப்போம்!" என்ற உயரிய நோக்கத்துடன் நடைபெற்ற இம்முகாம், மனிதநேயத்தையும் சமூகப் பொறுப்புணர்வையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்தது.

# பழனியில் 7 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த பிடியாணை குற்றவாளி கைது

பழனி நகர் காவல் நிலைய சரகத்தில் 3 திருட்டு வழக்குகளில் தொடர்புடைய கோவை உக்கடம் பகுதியைச் சேர்ந்த இப்ராஹிமின் மகன் முகமது அலி, வழக்கு விசாரணைக்கு நீண்டகாலமாக ஆஜராகாததால் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.




இந்நிலையில், 7 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த முகமது அலியை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அறிவுறுத்தலின்படியும், பழனி துணை காவல் கண்காணிப்பாளர் தேவராஜ் உத்தரவின்படியும், பழனி நகர் காவல் ஆய்வாளர் தங்கமுனியசாமி தலைமையிலான போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட முகமது அலி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

# சோழவரம் நல்ல மேய்ப்பன் சங்கம் சார்பில் சுதந்திர தின விழா; மாபெரும் இலவச மருத்துவ முகாம்

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சோழவரம் நல்ல மேய்ப்பன் சங்கம் மற்றும் வேல்ஸ் மருத்துவமனை இணைந்து 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாபெரும் இலவச மருத்துவ முகாமை சோழவரம் ஈசிஐ தூய பேதுரு ஆலய வளாகத்தில் நடத்தினர். முன்னதாக தேசியக் கொடியை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கப்பட்டது.



இம்முகாமில் பொது மருத்துவம், தாய் சேய் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், எலும்பு சம்பந்தமான அனைத்து பிரச்னைகளுக்கும் மருந்து மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. கண் பரிசோதனையின் போது பரிசோதனை செய்து கொண்டவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.

# கிராண்ட்லையன் விஷ்ணு நகர் குடியிருப்பு பொதுநல சங்கம் சார்பில் 80வது சுதந்திரதின விழா

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி விஷ்ணு நகர் குடியிருப்பு பொதுநல சங்கம் சார்பில் இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தின விழா சங்க தலைவர் லெனின் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ராமசந்திரன், பொருலாளர் தினேஷ்குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார்.



நிகழ்ச்சிக்கு சங்க துனை செயலாளர் மாடசாமி கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, இனிப்புகளை வழங்கினார். இதில் நிர்வாகிகள் சிவசங்கரன், ஒருங்கிணைப்பாளர் ஐய்யாத்துரை துனைத்தலைவர் முருக கனேஷ், வெங்கடேசன், சிவகுமார், யுவராஜ் மற்றும் கிராம பொதுமக்கள், அருணாசலம், கிருபாகரன், ரவி, சுந்தரமூர்த்தி, ராமன், சம்பத், பிரசாந், அக்பர், அலெக்ஸ், ஜெபராஜ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். முடிவில் கௌரவத்தலைவர் ஸ்டான்லி மோசஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.



**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மூவர்ண கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.**

### பட்டப்பகலில் அரிவாள் வெறியாட்டம்:

# மாமனாரை சரமாரியாக வெட்டிய மருமகன்; திருவண்ணாமலை அருகே பரபரப்பு

திருவண்ணாமலை அருகே குடும்பத் தகராறு மற்றும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக, மாமனாரை மருமகன் பட்டப்பகலில் பொதுமக்கள் முன்னிலையில் அரிவாளால் சரமாரியாக வெட்டிய சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. படுகாயமடைந்த மாமனார் உயிருக்கு ஆபத்தான நிலையில் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். தாக்குதல் நடத்திய மருமகனை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

திருவண்ணாமலை மாவட்டம் மாதளம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் முருகன். இவர் சீலபந்தல் கிராமத்தில் மெடிக்கல் ஷாப் நடத்தி வருவதாக கூறப்படுகிறது. இவருக்கு இரண்டு திரு



மணங்கள் நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

முருகனின் முதல் திருமணம், அவரது அக்காவின் மகளுடன் நடைபெற்றதாக கூறப்படுகிறது. இதையடுத்து, இரண்டாவதாக கீழ்படூர் மதுரவேங்காத்தாங்குளம் பகுதியைச் சேர்ந்த பரசுராமனின் மகளான செவிலியரையும் திருமணம் செய்துகொண்டதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக இரு குடும்பத்தினருக்கும் இடையே ஏற்கனவே கருத்து வேறுபாடுகள் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், முருகனுக்கும் அவரது இரண்டாவது மனைவியின் தந்தையான பரசுராமனுக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்கனவே தகராறு இருந்து வந்ததாக தெரிகிறது. இந்த விவகாரம் தொடர்பாக இருவருக்கும் இடையே அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று திருவண்ணாமலை–வேலூர் தேசிய நெடுஞ்சாலையில் ஊசாம்பாடி அருகே பரசுராமன் சென்று கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது அங்கு வந்த முருகனுக்கும், பரசுராமனுக்கும் இடையே மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த முருகன் தான் வைத்திருந்த அரிவாளை எடுத்து, பொதுமக்கள் முன்னிலையிலேயே பரசுராமனை சரமாரியாக வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த பரசுராமன் ரத்த வெள்ளத்தில் சாலையில் சரிந்து விழுந்தார்.

பட்டப்பகலில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் அரிவாள் தாக்குதல் நடைபெற்றதால், அங்கிருந்த பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக காவல்துறையினருக்கும், 108 ஆம்புலன்ஸுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள், படுகாயமடைந்த பரசுராமனை மீட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கிடையே, மாமனாரை தாக்கிய முருகன் தனது இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றதாக கூறப்படுகிறது. இதனைகவனித்த பொதுமக்கள் அவரை விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்தனர். பின்னர் அவரை திருவண்ணாமலை கிராமிய காவல் நிலைய போலீசாரிடம் ஒப்படைத்தனர். மேலும், சம்பவத்தை நேரில் பார்த்த சிலர் தங்களது செல்போன்களில் தாக்குதல் சம்பவத்தை பதிவு செய்ததாகவும், அந்தக் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருவதாகவும் கூறப்படுகிறது. குடும்பத் தகராறு கொடூர தாக்குதலில் முடிந்த நிலையில், பட்டப்பகலில் தேசிய நெடுஞ்சாலை அருகே நடைபெற்ற இந்த அரிவாள் தாக்குதல் சம்பவம் அப்பகுதியில் பெரும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பாக போலீசார் முருகனை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். குடும்பத் தகராறுக்கான முழுமையான காரணம், பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையின் பின்னணி, தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# செங்குன்றம் (தெற்கு) அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற நலச்சங்கம் சார்பில் சுதந்திர தின விழா

இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு செங்குன்றம் (தெற்கு) அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற நலச் சங்கம் சார்பில் தேசியக் கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி சங்கத் தலை



வர் கே.லட்சுமி நாராயணன் தலைமையில் செங்குன்றம் பேரூராட்சி மார்க்கெட் ஜிஎன்டி சாலையில் நடைபெற்றது.

செயலாளர் எம்.ஏ. லத்தீப், பொருளாளர் ஆர்.யுவராஜ் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

சங்கத் தலைவர் கே.லட்சுமி நாராயணன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சர்க்கரைப் பொங்கல், மிட்டாய்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

சங்க ஆலோசகர்கள் ஆர்.செயின்ராஜ், கே.சக்கரவர்த்தி, பி.மகேஷ், வி.சி. அகிலன், பி.ஜி. ஆனந்தன், எம்.ரமேஷ் ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைத்தலைவர் எம்.சஞ்சய்குமார், எஸ்.முகமது இப்ராஹிம், ஆர்.சஜி, எம்.ஏ. ஷேக் யூசுப், துணைச் செயலாளர்கள் கே.பாலமுருகன், ஏ.எம். சோமசுந்தர், ஜெ.கணபதி, கே.ரமேஷ், பி.வெங்கடேசன், செயற்குழு உறுப்பினர்கள் ஏ.ஜபருல்லா, எஸ்.ராகேஷ்குமார், வி.ரோஷன்குமார், ஜெ.கோமல், ஏ.பதுருதீன், இசட்.சைபுல்லா, வி.பாலாஜி, பி.செல்வம், பி. அன்பு, ஹெச்.ராஜா, எஸ்.எட்வின் ராஜசேகர், சட்ட ஆலோசகர் ஆர்.டில்லிபாபு உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக ஏஎஸ்ஏ அகஸ்தியா சிலம்பம் அகாடமி சார்பில் சிலம்ப மாணவர்கள் ஹெச்.வி. சஞ்சய் கிருஷ்ணா, ஹெச்.வி. மோகித் கிருஷ்ணா ஆகிய இருவரின் சிலம்பக் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

# தேனி மாவட்ட ஆட்சியரிடம் சிறந்த சேவைக்கான நற்சான்றிதழ் பெற்ற உதவி வேளாண்மை அலுவலர் கி. தாமோதரன்

தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற 80வது சுதந்திர தின விழாவில், சிறப்பாக பணியாற்றிய அரசு அலுவலர்களுக்கு



பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர். இதில், தேனி மாவட்ட வேளாண்மைத் துறையில் உதவி வேளாண்மை அலுவலராக பணியாற்றி வரும் திரு.கி.தாமோதரன் அவர்கள், தனது பணியை சிறந்த முறையில் மேற்கொண்டு சிறப்பாக செயலாற்றியதற்காக மாவட்ட நிர்வாகத்தின் பாராட்டு நற்சான்றிதழை பெற்றுள்ளார். (15.08.2026) நடைபெற்ற விழாவில், தேனி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா. வைத்தி நாதன், இ.ஆ.ப. அவர்கள், திரு. கி. தாமோதரன் அவர்களின் சிறந்த சேவை மற்றும் மக்கள் பணியை பாராட்டி இந்த நற்சான்றிதழை வழங்கி கௌரவித்தார். மாவட்ட ஆட்சியரிடம் விருது பெற்ற உதவி வேளாண்மை அலுவலர் கி. தாமோதரன் அவ ர்களுக்கு பொதுமக்கள், விவசாயிகள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் அவரது நண்பர்கள் தொடர்ந்து தங்களது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.



# தேனியில் "நாம் யார்?" கருத்தரங்கம்;சமூக மாற்றத்திற்கான விழிப்புணர்வு முழக்கம்

தேனி மாடர்ன் மஹாலில் மக்கள் மறுமலர்ச்சி தடம் அமைப்பு சார்பில் "நாம் யார்?" என்ற தலைப்பில் சிந்தனையை தூண்டும் வகையில் சிறப்பு கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு டாக்டர் ராஜ்வர்தனன் தலைமை தாங்கி உரையாற்றினார். மனிதநேயம், சமூக பொறுப்பு, சமுதாய முன்னேற்றம் மற்றும் மக்களின் ஒற்றுமை ஆகியவற்றை மையமாக கொண்டு நடைபெற்ற இக்கருத்தரங்கம், பங்கேற்ற அனைவரிடமும் புதிய சிந்தனைகளையும் ஆழ்ந்த சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.இக்கருத்த ரங்கில் முருகேசன், கருப்பையா, மஞ்சுளா தேவி, பாண்டிக்குமார், மாரியம்மாள் மற்றும் டாக்டர் கலைவாணன் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை சிறப்பாக பகிர்ந்து கொண்டனர்.

சமூகத்தில் உண்மையான மாற்றம் மலர வேண்டுமெனில், ஒவ்வொரு தனிமனிதனும் தன் சமூக பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை இந்நிகழ்ச்சி உரக்க வலியுறுத்தியது. மக்களிடையே ஒற்றுமையையும் விழிப்புண ர்வையும் தொடர்ந்து விதைத்து, ஒரு சிறந்த சமூக மாற்றத்தை உருவாக்க அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற தீர்மானமும் முன்வைக்கப்பட்டது.

"நாம் யார்?" என்ற வினாவிற்கு விடைதேடும் பயணமாக மட்டுமல்லாமல், "சமூகத்திற்காக நாம் என்ன செய்ய வேண்டும்?" என்ற உயரிய சிந்தனையையும் மக்கள் மனதில் விதைத்த இக்கருத்தரங்கம், பங்கேற்பாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்று இந்நிகழ்வு வெற்றிகரமாக நிறைவுற்றது.

# "கம்பம் பேருந்து நிலையத்தில் பேருந்தை ஆபத்தான முறையில் இயக்கிய அரசு பேருந்து ஓட்டுநர்" நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

தேனி மாவட்டம், கம்பம் பேருந்து நிலையத்தில் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல், ஆபத்தான முறையில் அரசு பேருந்தை இயக்கி சென்ற ஓட்டுநர் மீது உரிய துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த 15.08.2026 அன்று மதியம் 1.40 மணியளவில் கம்பம் பேருந்து நிலையத்திற்கு வந்த 'TN57 N2985' என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தில் இருந்து பயணிகள் அவசரமாக இறக்கிவிடப்பட்டுள்ளனர். தொடர்ந்து, பேருந்தில் பயணிகள் ஏற வேண்டிய இடத்தில் பேருந்தை முறையாக நிறுத்தாமல், அவசர அவசரமாக புறப்படச் செய்ததாக கூறப்படுகிறது. பேருந்து





நகர தொடங்கியதும் அதில் பயணிக்க வேண்டிய பயணிகள் சிலர் ஓடிவந்து ஏற முயன்றுள்ளனர். பயணிகள் ஓடிவருவதை கவனித்தும், பேருந்தை நிறுத்தாமல் ஓட்டுநர் வேகமாக ஓட்டி சென்றதால், பயணி ஒருவர் நிலைதடுமாறி கீழே விழும் நிலை ஏற்பட்டுள்ளது. முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் நோயாளிகள் எனப் பல தரப்பினரும் தினமும் வந்து செல்லும் பேருந்து நிலையத்தில், பயணிகள் முழுமையாக ஏறும் முன்பே பேருந்தை இயக்குவது மிகப்பெரிய விபத்துகளுக்கு வழிவகுக்கும் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இந்த சம்பவத்தில் ஓட்டுநர் உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றினாரா என்பது குறித்து போக்குவரத்துத்துறை அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர். தவறு நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட ஓட்டுநர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக ஏறிய பின்னரே பேருந்தை இயக்க வலியுறுத்தும் கண்காணிப்பு நடைமுறைகளை பேருந்து நிலையங்களில் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

# நத்தம் அருகே நடந்து சென்ற பெண்ணிடம் செயின் பறிப்பில் ஈடுபட்ட நபர் கைது ஒருவருக்கு வலைவீச்சு

திண்டுக்கல் மாவட்டம் நத்தம், கோவில்பட்டியை சேர்ந்த செல்வி இவர் கடந்த 19ம் தேதி வீட்டின் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த 2 மர்ம நபர்கள் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் தங்க செயினை பறித்து சென்றனர்.



இதுகுறித்து புறநகர்DSP.சங்கர் உத்தரவின்பேரில்நத்தம்காவல்நிலைய ஆய்வாளர்பொன்குணசேகரன்தலைமையிலானபோலீசார் பகுதியில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட மதுரை,பரவையை சேர்ந்த சபரிநாதன்(25) என்பவரை கைது செய்து அவரிடமிருந்து 3 தங்கச் செயினை மீட்டனர்.

மேலும் இதில் தொடர்புடைய ரவிகண்ணனை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# "சின்னமனூரில் 4ம் ஆண்டு தனலட்சுமி நினைவு குறு மாரத்தான்" 500க்கும் மேற்பட்ட வீரர்கள் உற்சாக பங்கேற்பு

தேனி மாவட்டம் சின்னமனூரில் தனலட்சுமி நினைவாக 4ம் ஆண்டு குறு மாரத்தான் போட்டி கோலாகலமாக நடைபெற்றது. ரோட்டரி கிளப் ஆப் சின்னமனூர் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட இப்போட்டியை தலைவர் ரமேஷ், செயலாளர் பாரதிராஜா, பொருளாளர் உமாராணி மற்றும் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். இப்போட்டியில் கோயம்புத்தூர், சேலம், மதுரை, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட வீரர்கள் மிக உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

இந்த மாரத்தான் போட்டி 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள், 12 வயதுக்குட்பட்ட சிறுவர்,சிறுமியர், 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள், மேலும் பொது பிரிவினர் என மொத்தம் ஆறு பிரிவுகளாக நடத்தப்பட்டது. ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி கவுரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினராக ரோட்டரி மாவட்டம்3000ன் 'அறம் சிங்க பெண்ணே' கனவு திட்டத்தை செயல்படுத்திய ஆனந்த ஜோதி கலந்து கொண்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். தொடர்ந்து சிறப்புரையாற்றிய அவர், மாரத்தான் போட்டிகள் இதயத்தின் இயக்கம் மற்றும் ரத்த ஓட்டத்தை சீராக்குவதுடன், உடல் எடையை கட்டுக்குள் வைக்கவும், தசைகளின் வலிமையை மேம்படுத்தவும் உதவுகிறது என்றார். மேலும், கடுமையான பயிற்சியும் ஓட்டமும் மனிதனின் மன உறுதியை பலப்படுத்தி மன அழுத்தத்தை குறைக்கும் என குறிப்பிட்ட அவர்,





விழிப்புணர்வு இயக்கங்கள், சமூக நலம், உலக அமைதி மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இவ்விழாவில் திட்ட சேர்மன் பாலசுப்பிரமணியன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் குபேந்திரன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பலரும் ஒரே இலக்கிற்காக இணைந்து ஓடுவதன் மூலம் சமூக ஒற்றுமை வளரும் என்பதை உணர்த்தும் வகையில் இந்த மாரத்தான் போட்டி மிகவும் சிறப்பாக நிறைவுற்றது.

# பழனி அருகே வீட்டில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை - பெண் கைது

பழனி அருகே வீட்டில் வைத்து சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்வதாக சமூக வலைதளங்களில் வீடியோ ஒன்று வைரலானது.

இதுகுறித்து தகவல் அறிந்த திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

அவரது உத்தரவின் பேரில், டிஎஸ்பி தேவராஜ் தலைமையில், காவல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி, உதவி ஆய்வாளர் ஆனந்த் உள்ளிட்ட போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

தொடர்ந்து, வீட்டில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்ததாக கூறப்படும் பெண்ணை போலீசார் சுற்றிவளைத்து கைது செய்தனர். மேலும், அங்கு மதுபானங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததா என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



சமூக வலைதளங்களில் வெளியான வீடியோவின்அடிப்படையில்விரைந்து நடவடிக்கை எடுத்த போலீசாருக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# பொத்தூரில் தவெக கொடியேற்றுதல், கல்வெட்டு திறப்பு விழா; அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தமிழக வெற்றிக் கழகம் மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பொத்தூர் ஊராட்சி பவானிநகர் கிளையில் கொடி கம்பம், கல்வெட்டு திறப்பு விழா, அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி கிழக உறுப்பினர் வி.எஸ். மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

வில்லிவாக்கம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.மணிவேல் முன்னிலை வகித்தார்.

தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளரும் உறுப்பினர் சேர்க்கை அணி மாநில துணைச் சயலாளரும் மாதவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய் பிரபு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக கொடியேற்றி, கல்வெட்டைத்திறந்து வைத்து பொதுமக்களுக்கு அன்னதானத்தை துவக்கி வைத்தார்.



இந்நிகழ்வில் பவானிநகர் கழக உறுப்பினர்கள் எம்.வால்டர், கே.பிரபாகர், எஸ்.செல்வகுமார், பி.கே. மாதவராவ், ஆர்.தியாகராஜாஉள்ளிட்ட பவானிநகர் நண்பர்கள், பொதுமக்கள், தவெக மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சங்கம் சார்பில் சுதந்திர தின விழா; நலத்திட்ட உதவிகள்

செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சங்கம் சார்பில் 80வது சுதந்திர தின விழா, அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு பேன், சமையலுக்கு தேவையான பாத்திரங்கள், மேஜை, டேபிள், சேர்ஸ்டவ் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியும் செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சங்கத் தலைவர் டி.கோபி தலைமையில் செங்குன்றம் சங்கத் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சங்க துணைத்தலைவர் சாய் எம். ஜெயபாலன், செயலாளர் ஏ.லோகநாதன் இணைச் செயலாளர் ஆர்.நாகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு நெல் அரிசி வணிகர் சங்க





சம்மேளனத் தலைவர் துளசிங்கம் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் சங்க நிர்வாகிகள், அரிசி ஆலை உரிமையாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# போதை இல்லாத சமுதாயம் உருவாக அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்; குழந்தை திருமணத்தை தடுத்து கல்வி மூலம் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும்

## கிராம சபையில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் வலியுறுத்தல்

80ஆவதுசுதந்திரதினத்தைமுன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்த லைவர் வந்தனா கார்க் தலைமையில், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட கொளக்குடி ஊராட்சியில் கிராம சபை கூட்டம் இன்று (15.08.2026) நடைபெற்றது.

கிராமங்களில் அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துதல், பொதுமக்க ளுக்கு அரசுத் திட்டங்கள் குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்துதல், அரசு செயல்பா டுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் கிராம வளர்ச்சி யில் மக்களின் பங்களிப்பை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.






கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், தூய்மையான மற்றும் தடையற்ற குடிநீர் விநியோகம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பணிகள், திட மற்றும் திர வக் கழிவு மேலாண்மை, தமிழ்நாடு மக ளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்ந்த திட் டங்கள், ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி, கால்நடை பரா மரிப்புத்துறை மற்றும் வேளாண்மைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட் டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

போதை இல்லாத சமுதாயம் உருவாக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் பேசியதாவது:

“80ஆவது சுதந்திரதினவிழாநாடு முழு வதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரு கிறது. அனைவருக்கும் சுதந்திர தின நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்களின் வளர்ச் சியை முன்னிறுத்தி கிராம சபை கூட்டங் கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு சார்பில் செயல்படுத்தப்படும் திட் டங்கள் மற்றும் பணிகள் குறித்து பொது மக்கள் அறிந்து கொள்ளவும், அவற்றில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய் யவும் கிராம சபை கூட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கிராமங்களில் திட் டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட் டால்தான் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

கிராம மக்களின் ஆரோக்கியம் மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. கிராம வளர்ச்சிக்குத் தேவையான கருத்துகள் மற்றும் கோரிக் கைகளை பொதுமக்கள் மாவட்ட நிர்வா கத்திடம் நேரடியாக தெரிவிக்கலாம்.

போதைப்பொருட்களை தவிர்த்து, போதை இல்லாத சமுதாயத்தை உரு வாக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். போதைப்பொ ருட்கள்தொடர்பானபுகார்களைமாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை மூலம் தெரிவிக்கலாம்.

குழந்தை திருமணத்தை தடுத்து கல்வி மூலம் எதிர்காலத்தை உருவாக்க வேண் டும்

குழந்தை திருமணங்கள் நடைபெறா மல் தடுக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். குழந்தைகளை தொடர்ந்து கல்வி கற்கச் செய்து, அவர்க ளின் எதிர்காலத்தை சிறப்பாக உருவாக்க பெற்றோர்கள் முழுமையான ஒத்து ழைப்பு வழங்க வேண்டும்.

மேலும், சாலையில் செல்லும்போது தலைக்கவசம் அணிந்து, சாலை பாது காப்பு விதிமுறைகளை முறையாக கடை பிடித்து வாகனங்களை இயக்க வேண் டும். போதிய அளவில் பருவமழை பெய்யாததாலும், வெப்ப அலை காரண மாக நீர்நிலைகள் வறண்டு வருவதாலும், அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி நீரை சேமிக்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அருள்மிகு அருணாசலேசு வரர் திருக்கோயிலில் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழி பாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டு, ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினார். முன்னதாக, 80ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருவண்ணாமலை மாநக ராட்சியில் அமைந்துள்ள அண்ணல் காந் தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் பூ.காஞ் சனா, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர் பரணிதரன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பழனியில் 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, பழனி நகர தமிழ் மாநில காங்கிரஸ் அலுவலகத்தில், தேசியக்கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. பின்பு தபால் நிலையம் அருகே கிருஷ்ணன் நினைவு கொடிக்கம்பத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. பிறகு வ உ சி பேருந்து நிலையம் அருகே உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு நகரத் தலைவர் சண்முகநாதன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில செயலாளர் வழக்கறிஞர் மணிகண்ணன், முன்னாள் மாவட்ட தலைவர் திருஞானசம்பந்தம், மாநில செயற்குழு உறுப்பினர் பி டி சி நாகராஜன், கனகசபாபதி, மாவட்ட இளைஞரணி தலைவர் சுந்தரபாண்டியன், நாகேஸ்வரன், பாலசுப்பிரமணி, நகரத் துணைத் தலைவர் திருஞானசம்பந்தம், கோபால், நகர செயலாளர் சின்னத்துரை, மாரியப்பன், நகரப் பொருளாளர் பாஸ்கரன், பாலசமுத்திர பேரூர் தலைவர் ராமு, நெய்க்காரப்பட்டி பேரூர் தலைவர் சண்முகவேல், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சிவசுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் அருண், கீரனூர் பேரூர் தலைவர் காட்டப்பன், படக்கடை சரவணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்



இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, விசுவாசம் அறக்கட்டளை சார்பாக, பள்ளியில் நடைபெற்ற சிறப்பு சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பெருமிதம் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். நாட்டின் எதிர்காலத் தூண்களான மாணவச் செல்வங்களுடன், சுதந்திரப் போராட்ட வீரர்களின் தி யாகங்களை நினைவு கூர்ந்தோம். கல்வி, ஒழுக்கம் மற்றும் சமூகப்பற்றுடன் நமது இளைய சமுதாயம் உ யர்ந்து, பாரத நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதே நமது அற க்கட்டளையின் முதன்மை நோக்கமாகும். "சுதந்திரத்தை வென்றெடுப்பதை விட, அதைக் காத்து மேம்படுத்துவதே நமது இன்றைய கடமை!" அனைவருக்கும் நமது உளமார்ந்த சுதந்திர தின நல்வாழ்த்துகள்!

# திருவண்ணாமலை எஸ்.கே.பி. சட்டக் கல்லூரியில் 80வது சுதந்திர தின விழா

திருவண்ணாமலை எஸ்.கே.பி. சட்டக் கல்லூரியில் 80வது சுதந்திர தின விழா கொண்டாடப் பட்டது




திருவண்ணாமலை எஸ்.கே.பி. சட்டக் கல்லூரியில் 80வது சுதந்திர தின விழா கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு எஸ். கே.பி கல்வி குழுமத்தின் தலைவர் கு.கருணாநிதி அவர்கள் தலைமை வகித் தார்.கல்வி குழுமத்தின் இணைச் செயலாளர் திரு. கே.வி.அரங்கசாமி மற் றும் முதன்மை நிர்வாக அதிகாரி ஆர்.சக்தி கிருஷ் ணன் ஆகியோர் முன் னிலை வகித்தனர். கல்லூ ரியின் முதல்வர் முனைவர் ரவி அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி சிறப் பித்தார். மேலும் இந்நி கழ்ச்சியில் பி.ஆர்.ஓ. சையத் ஜஹிருத்தீன் மற் றும் பேராசிரியர்களும் துணை பேராசிரியர்களும் மாணவ மாணவியர்கள் ஊழியர்களும் மாணவர்க ளும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



பழனியில் 50வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில் சார்பாக, அடிவார வளாகத்தில் உள்ள குடமுழுக்கு நினைவரங்கில் பொது விருந்து நடைபெற்றது. இதில் கோவில் நிர்வாகி வெங்கடேசன், பழனி காங்கிரஸ் நகர தலைவர் முத்து விஜயன், மண்டல தலைவர் வீரமணி, மாவட்ட துணைத் தலைவர் முருகானந்தம், எஸ்சி எஸ்டி மாவட்ட தலைவர் குப்புசாமி, ஐஎன்டியூசி தமிழரசன், சமூக சேவகர் முகமது அலி, நஸ்ரூல், பாலசமுத்திரம் பேரூர் தலைவர் முருகானந்தம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### செய்யாறு அருகே கல்யாண முருகர் ஆலயத்தில் ஆடிப்பூர விழா:

# வாராகி அம்மனுக்கு வளையல் அலங்காரம்; 125 கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே அண்ணா நகர் பகுதியில் அமைந்துள்ள வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ கல்யாண முருகர் ஆலயத்தில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் மற்றும் நலத்திட்ட நிகழ்ச்சிகள் பக்தி பரவசத்துடன்நடைபெற்றன.



ஆடிப்பூரத்தை முன்னிட்டு ஆல யத்தில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ வாராகி அம்மனுக்கு சிறப்பு அபி ஷேகம் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து அம்மனுக்கு ஏராளமான வளையல்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடை பெற்றது. சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலித்த வாராகி அம்மனை திரளான பக் தர்கள் தரிசனம் செய்து வழிபட்டனர்.

125 கர்ப்பிணிப் பெண்களுக்கு வளை காப்பு

விழாவின் மற்றொரு சிறப்பம்சமாக, ஆலய வளாகத்தில் 125 கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கே.வி. வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி யில் கர்ப்பிணிப் பெண்களுக்கு பாரம் பரிய முறைப்படி வளைகாப்பு நடத்தப் பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கர்ப்பிணிப் பெண்களும், அவர்களது குடும்பத்தினரும் நிகழ்ச்சியில் மகிழ்ச்சி யுடன் கலந்து கொண்டனர். தாயும், சேயும் நலமாக இருக்க வேண்டி சிறப்பு பிரார்த்தனைகளும் நடைபெற்றன. ஆடிப்பூரத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சியில்சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர் கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஆலய வளாகம் முழுவதும் பக்தர்களின் கூட்டத்தால் களைகட்டி யது. பக்தி வழிபாட்டுடன், கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு நடத்தி சீர்வ ரிசை வழங்கிய நிகழ்வு, ஆன்மிகத்தை யும் சமூக நலத்தையும் ஒருங்கிணைக் கும் வகையில் அமைந்தது.



80 வது சுதந்திர தின விழா அருள்மிகு இடும்பன் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பழநி சட்ட மன்றத்தின் உறுப்பினர் திரு. ரவி மனோகரன்அவர்கள்சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி விழாவை துவக்கி வைத்தார் . இந்நிகழ்ச்சியில் பரம்பரை அறங்காவலர் குழு தலைவர் அ. ராஜா வரவேற்புரை வழங்கி கௌரவித்தார். நாச்சிமுத்து அவர்கள் பொன்னாடை போர்த்தினார். கார்த்திக் ( மாணவரணி துணை செயலாளர்) நன்றி தெரிவித்துள்ளார்.

# பழநி சண்முகநதி பள்ளிவாசலில் மழை வேண்டி சிறப்பு தொழுகை

பழநி அருகே சண்முகநதி பள்ளிவாச லில் நேற்று சிறப்பு தொழுகை நடந்தது. இதில் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு சிறப்பு தொழுகை நடத் தினர். தொழுகை நிறைவடைந்த பின்,



பள்ளிவாசலுக்கு வெளியே அனைவரும் ஒன்றிணைந்து மழை வேண்டி சிறப்பு கூட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். பழநி மற்றும் சுற்றுவட்டார பகுதிக ளில் இந்த ஆண்டு போதிய அள வில் மழை பெய்யாததால், விவசா யத்திற்கு தேவையான நீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும், குடிநீர் தட்டுப்பாடும் நிலவி வருகிறது.

இதனால் நல்ல மழை பெய்து நீர்நிலை கள் நிரம்பி, விவசாயம் செழிக்கவும், குடி நீர் பிரச்சினை தீரவும் வேண்டி பள்ளிவா சலில் சிறப்பு தொழுகை நடத்தப்பட்டது.

குடிநீருக்கும், விவசாய தேவைக்கும் தண் ணீர் இல்லாமல் மக்கள் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.

இப்பிரச்சனைகள் நீங்கி அனைத்து பகு திகளிலும் மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டும். குடிநீர் தட்டுப்பாடு நீங்க வேண்டும் என்பதற்காக கூட்டு பிரார்த்தனை செய்யப்பட்டதாக ஜமாத் தார்கள் தெரிவித்தனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை பழனி தர்ம பரிபாலன சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# செங்குன்றம் காவல் நிலையத்தில் சுதந்திர தின விழா





ஆ வ டி காவல் ஆணையரகம் செங்குன்றம் காவல் மாவட்டம் செங்குன்றம் காவல் நிலையத்தில் நடைபெற்ற 80வது சுதந்திரத் தின வி ழாவிற்கு செங்குன்றம் காவல் ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி தலை மையேற்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து இனிப்புகளை வழங் கினார்.

இந்நிகழ்வில் செங்குன்றம் குற்ற வியல் ஆய்வாளர் பரிபூரணம், காவல் உதவி ஆய்வாளர் ஜனார்த்த னன் உள்ளிட்ட உதவி ஆய்வாளர் கள், காவலர்கள் கலந்துகொண்டு சுதந்திர தின விழா வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.

# ஆங்காடு ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

திருவள்ளூர் மாவட்டம் மாதவ ரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் ஆங்காடு ஊராட்சியில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செய லர் தனசேகரன் தலைமையில் ஆங் காடு சிறுனியம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற் றது.




சோழவரம் ஊராட்சி ஒன்றிய வட் டார வளர்ச்சி துணை அலுவலர் பற் றாளர் விஜயலட்சுமி, கிராம நிர் வாக அலுவலர் ரவீந்திரன், கிராம உதவியாளர்கள் மஞ்சுளா, பேகம் உள்ளிட்ட ஊராட்சி பணியாளர்கள், மக ளிர் குழு நிர்வாகிகள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### செய்யாறு வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் சுதந்திர தின சமபந்தி விருந்து:

# பொதுமக்களுக்கு உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவருந்திய எம்.எல்.ஏ. முக்கூர் சுப்பிரமணியன்

திருவண்ணாமலை மாவட்டம் செய் யாறு நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் 80வது சுதந் திர தினத்தை முன்னிட்டு சிறப்பு சமபந்தி விருந்து நடைபெற்றது.



இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் முக்கூர் சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். முதலில் ஆலயத்தில் சுவாமி தரிசனம் செய்து சிறப்பு வழிபாட் டில் பங்கேற்ற அவர், தொடர்ந்து நடை பெற்ற சமபந்தி விருந்தில் பொதுமக்க ளுக்கு உணவு பரிமாறினார்.

பின்னர் பொதுமக்களுடன் இணைந்து அமர்ந்து உணவருந்திய எம்.எல்.ஏ., அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக ளைத் தெரிவித்தார். சமபந்தி விருந்து என் பது சாதி, மதம், ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் சமம் என்ற சமூக நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்தும் நிகழ் வாக அமைந்தது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடை பெற்ற இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சமபந்தி விருந்தில் உணவருந்தினர். ஆலய வளா கத்தில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கூடியதால் விழாக்கோலம் நில வியது.

நிகழ்ச்சியில் அ.தி.மு.க. நிர்வாகிகள், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரி கள் மற்றும் பணியாளர்கள், ஆலய நிர்வா கத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆலயத் தில் நடைபெற்ற சமபந்தி விருந்து, சமூக ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் நல்லி ணக்கத்தை எடுத்துரைக்கும் வகையில் சிறப்பாக அமைந்தது.



# 498 விவசாயிகள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம்? KGF TAPCMS விவகாரத்தில் கடும் குற்றச்சாட்டு

கே.ஜி.எஃப் தாலுகா வேளாண் விளைபொருள் சந்தை கூட்டுறவு சங்கத்தில் தகுதியான 498 விவசாயிகள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA